**பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டக் கூறு II - 2022**

---

பொதுக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டக் கூறு II இன் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 யூலை 25 ஆம் திகதிய 6228 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 5.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுல்ப்படுத்தல் முகவராகவும் உள்ளது. பொதுக் கல்வி முறைமையின் தரத்தை மேம்படுத்தி நிர்வாகத்தை வலுப்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். ஆரம்ப மற்றும் இரண்டாம் தர கல்வியின் தரத்தை மேம்படுத்தி நிர்வாகத்தை வலுப்படுத்துதல், நிகழ்ச்சித்திட்ட செயற்பாடு மற்றும் தொழில்நுட்ப உதவி எனும் பெயரிலான 02 கூறுகளின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 449,645 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2,900 மில்லியன் தொகையாக உள்ளதுடன் அதில் ரூபா 15,505 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 434,140 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 ஆகஸ்ட் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செலவினக் கூற்றையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லின் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் செயற்திட்டச் செலவினம் காட்டப்பட்டிருக்கவில்லை. | 65.4 | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் கூறு II இன் செலவினங்கள் கணக்கீடு செய்யப்பட்டது. அதன் பிரகாரம் 2022 திசெம்பர் மாத செலவினங்களாக இருந்த ரூபா 65,443,738.15 திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டதன் காரணமாக 2023 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டது. | செலவினத்தின் சரியான தொகை நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 5 இன் 43(அ) பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிதி நிலைமைக் கூற்றுக்குமான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதி நிலைமைக் கூற்றுத் திகதியின் இறுதி அந்நிய செலாவணி விகிதத்தில் குறிப்பிடப்பட வேண்டும். எனினும், மேற்படி தேவைப்பாட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் வெளிநாட்டுக் கடனுடன் தொடர்புடைய நாணயமாற்று சமநிலை சீராக்கம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 261 | 2024 கணக்குகளில் நிதிக்கூற்றின் குறிப்பொன்றாக பெறுமதியின் நாணமாற்று சமநிலை சீராக்கங்கள் கணக்கீடு செய்யப்படும். | இறுதி அந்நிய செலாவணி விகிதத்தில் நிதி நிலைமை குறிப்பிடப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி மற்றும் | குறைந்தபட்சம் 02 மாதங்களுக்கு ஒரு முறை செயற்திட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டம் நடாத்தப்படுவதை வரிசை அமைச்சின் செயலாளர்/ மாகாண சபையின் பிரதம | வழிநடாத்தல் குழுக் கூட்டங்கள் கல்வி அமைச்சு மற்றும் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி | சுற்றறிக்கை மற்றும் செயற்பாட்டு கையேடு ஆகியவற்றிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செயற்திட்ட செயற்பாட்டு கையேட்டின் ஆம் பிரிவு | 5.1 | செயலாளர் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக ஒரே ஒரு வழிநடாத்தல் குழுக் கூட்டமே நடாத்தப்பட்டிருந்தது. | அமைச்சு ஆகிய இரண்டினாலும் நடாத்தப்படுகின்றன. அந்தக் கூட்டங்களில் கல்வி அமைச்சும் பங்குபற்றுகிறது. | |
| (ஆ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் ஆம் பந்தி | 96 | கல்வி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். 2022 ஆம் ஆண்டிற்கான கல்வி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் முன்வைக்கப்பட்ட உள்ளக கணக்காய்வுத் திட்டம் பொதுவாக வெளிநாட்டு உதவி நிகழ்ச்சித்திட்டங்களின் ஒருங்கிணைப்பு, ஒழுங்குமுறை மற்றும் மதிப்பீடு என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் தொடர்பாக எந்தவொரு கணக்காய்வு நடவடிக்கையும் இனங்காணப்பட்டிருக்கவில்லை அல்லது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் பெறப்படவில்லை. | உளளகக் கணக்காய்வை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3. பௌதீக செயலாற்றல்

#### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| கூறு II | செயற்பாடு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் அலகுகள்/ சதவீதம் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் அலகுகள்/ சதவீதம் | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதத்திற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கை | 100 | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கான செயன்முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததால் மீளாய்வாண்டில் அடைந்துகொள்ளப்பட்ட முன்னேற்றத்தை கணக்காய்வினால் சரிபார்க்க முடியவில்லை. | நான்காவது காலாண்டில் வருடாந்த மொத்த பாதீடு மாற்றப்பட்டிருந்தது. |

**முகாமைத்துவத்தின் பதில்** 2022 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டில் வருடாந்த மொத்த பாதீடு மாற்றப்பட்டிருந்ததுடன் திட்டத்தை மாற்றுவது மேலதிக வேலையாக இருந்ததால் அதற்கு மேலதிக நேரம் தேவைப்படுகிறது. 2023 ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் செயன்முறையை சீராக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** ஒவ்வொரு கூறுகளுக்கும் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் முன்னேற்ற அறிக்கையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

#### 3.2 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டிற்கான 04 செயற்பாடுகளுக்காக ரூபா 175 மில்லியன் செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் பின்னர் நான்காம் காலாண்டில் 05 செயற்பாடுகளுக்காக ரூபா 185.7 மில்லியனாக திருத்தப்பட்டுள்ளது. மேலும், மதிப்பீடு மீண்டும் 2022 திசெம்பர் 20 இல் ரூபா 167.7 மில்லியனாகத் திருத்தப்பட்டது. அதன் பிரகாரம் கூறு II இன் கீழ் எதிர்பார்க்கப்படும் பணிகளை நிறைவேற்றுவதற்கு முறையான நிதித் திட்டம் அமுல்படுத்தப்படாதமை அவதானிக்கப்பட்டது. | நான்காவது காலாண்டில் ஏற்பட்ட அரசாங்க மாற்றம் காரணமாக, 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் பாதீட்டுத் திணைக்களத்தால் திருத்தப்பட்டுள்ளது, மேலும் AIP மற்றும் GEMP வரவு செலவுத் திட்டங்கள் அதன் பிரகாரம் திருத்தப்பட வேண்டியிருந்தன.<br><br>எனினும், அமுல்ப்படுத்தல் கட்டத்தில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேலதிக பாதீட்டு ஒதுக்கீட்டிற்காக அல்லது ஒதுக்கீட்டைக் குறைப்பதற்காக கோரிக்கைகளை முன்வைக்கின்றனர். | முறையான நிதி திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |